
Moral Series—1

ஸ்ரீ

ஸ்ரீமத் கம்ப ராமாயணம்.

# இராமர்—
# புருஷோத்தமர்.



ஆசிரியன்,

வடுவூர், இராம—சடகோபன்.

1932.

காப்பிடப்பெற்றது.] [3 அணா.

# Foreword.

The character of Rama is splendidly portrayed. He is represented as a noble minded, pious, virtuous man whose bravery, unselfish generosity, filial obedience, tender attachment to his wife, love for his brothers and freedom from all resentful feelings, we can appreciate and follow in our daily life and thought.

The language of the book is simple and forcible.

This book is a work of real value to the world.

T. V. APPARSUNDARAM,
M.A., L.T., (Madras) M.Ed. (Leeds) F.B.E.E.(London.)
*District Educational Officer*,
SOUTH ARCOT.

10–1–1932

# நூன்முகம்.

## நூல் வரலாறு.

### காவியங்கள்.

அன்பர்களே! காவியங்கள், நம்மை நமது தினசரி வாழ்க்கையிலிருந்து தட்டி எழுப்பி, உயர்ந்த கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் கைக்கொள்ளச் செய்கின்றன.

மனோரஞ்சித மலர் பலருக்கும் விருப்பமான பல்வேறு மணங்களையும் பரப்புவதுபோல், காவியங்கள் பலவித மனிதருக்கும் உணவு நல்கி, பரவசம் அளிக்கின்றன.

### இராமாயணம்.

வால்மீகி இராமாயணம் ஆதி காவியம் என்று வழங்குகிறது. இது இமகிரி முதல் குமரிமுனை வரை மக்களின் இரத்தத்தில் ஊடுருவிக்கலந்து மிகவும் பரவி இருக்கிறது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் தினந்தோறும் இராம சரிதத்தைப் படிக்கின்றனர். கேட்கின்றனர். மலரில் வண்டுகள் குடைவது போல் அறிவாளிகள் இதில் மூழ்குகின்றனர். பாரத தேசத்தை இராமாயணமே பண்படுத்தி இருக்கிறது.

வெளி நாடுகளிலுள்ள பல முக்கிய பாஷைகளிலும், இந்நாட்டிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் இதை மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

### கம்ப ராமாயணம்.

கம்பர் ஒரு பிறவிப் பெருங் கவி. இவர் கவிச் சக்கரவர்த்தி எனவும் புகழப் பெற்றவர் இவருடைய கற்பனை சக்தியை எட்ட யாராலும் ஆகாது.

இராம சரிதத்தைக் கம்பர் சொற்சுவை துள்ள, பொருட் சுவை பொங்கக் கற்பனைக் களஞ்சியமாக, தமிழ்ச் செய்யுள் ஆக்கினார். கம்ப ராமாயணம் தமிழுலகுக்கு ஓர் பேரிலக்கியமாக விளங்குகிறது.

## இராமர்.

இராமாயணத்தின் தலைமகன் இராமர். இவர் பல அருங்குணங்களுக்கு இருப்பிடமாக விளங்குகிறார்.

பல நூற்றாண்டுகளாக பலகோடி மக்கள் இராமரைப் போற்றிப் பின்பற்ற முயற்சித்து வருகின்றனர்.

எனவே கம்பர் மிகச் சிறந்த கவி. இராமாயணம் மிகச் சிறந்த நூல். இராமர் மிகச் சிறந்த புருஷர்.

## நோக்கம்.

இராமருடைய சிறந்த குணங்களை, கம்பருடைய சிறந்த கவிகளோடு கூடிய எளிய இனிய வசன நடையில், சிறந்த நவீன முறையில், சுருங்கத் தொகுத்துக் குறைந்த விலையில் வெளியிட இந்நூலில் முயற்சித்திருக்கிறது. சாத்தியமான வரை கவிகளைச் சந்தி பிரித்துச் சுலபம் ஆக்கியிருக்கிறது.

## உபயோகம்.

மாணவருக்கு ஒழுங்கு முறைப் பாடமாக இது மிகவும் பயன் பெறும். அன்றியும் தமிழ்ப் பயில்வோருக்கும், பிரசங்கம் புரிவோருக்கும் இது மிகவும் உதவியாகும்.

## செய்வித்தோர்.

பல ஆண்டுகளாக பிரசங்கம் செய்கையில் இதை நூல் வடிவாக்கும்படி தூண்டி எனக்கு ஊக்கம் அளித்த

பல அன்பர்களுக்கும், இச்சமயம் இதை வெளியிடப் போதரவாக நிற்கும் நண்பர்களுக்கும், இதற்கு அணிந்துரை உதவ இணங்கிய வித்யாதிகாரி அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

இந்நூலைப் பின்னும் அழகு செய்ய அறிவாளிகள் வெளியிடும் திருத்தங்களை நன்றி அறிதலோடு ஏற்று மறுபதிப்பில் இணைக்க முயற்சிக்கின்றேன்.

உரிமை.

இந்நூலைத் தமிழ் மக்களுக்கு உரிய தாக்கும்படி பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

பரிக்கல்.
1-1-32

வடுவூர், இராம-சடகோபன்.
ஆசிரியன்.

ஓம்.

## கடவுள் வணக்கம்.

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

## தொடக்கம்.

இராமர் தசரத சக்கரவர்த்தியின் மூத்த பிள்ளை. இவர் தெய்வீகம் நிறைந்த அவதார புருஷர். என்றாலும் இராமர் தன்னை மனிதனாகவே மதித்து, மனிதனாகவே நடந்து, மனிதருக்கு வழிகாட்டிப் போனார். ஆகவே அவர் நடத்தையிலிருந்து நமக்கு என்ன நற்குணங்கள் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்ய முயற்சிப்போம்.

## I. வீரம்.

இராமர் அளவற்ற பலமுடையவர். இதனால் தான் விசுவாமித்திரர் தன் யாகத்தைக் காக்கும் பொருட்டுத் தசரதரை வேண்டி இராமரை அழைத்துப் போகிறார்.

### 1. தாடகை வதம்

விசுவாமித்திரரும் இராம லக்ஷ்மணரும் ஒரு காட்டில் போகின்றனர். அங்கு தாடகை எதிர்ப்பட்டாள். இவள் கோரமான உருவமும், பயங்கரமான பலமும், கொடுமையான நெஞ்சும் உடையவள்.

தாடகை இராமரைக் கொல்ல முயற்சித்தாள். அவளை உடனே கொன்றுவிடும்படி முனிவர் இராமரைத் தூண்டினார். இராமரோ இவள் பெண் என்று இரங்கினார். இவள் பெண் தன்மை இழந்த கொடிய பேய் என்று முனிவர் எடுத்துக் காட்டினார். இராமர் வில்லை வளைத்து அம்பு தொடுத்தார்.

சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே

தாடகை மாண்டு விழுந்தாள். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர் மகிழ்ந்து இராம லக்ஷ்மணருக்கு அநேக அம்புகளை உதவினார்.

## 2. வேள்வி காத்தல்.

விசுவாமித்திரருடைய யாகம் நடக்கிறது. இராம லக்ஷ்மணர் காத்து நிற்கின்றனர். தாடகையின் பிள்ளைகளாகிய மாரீச சுபாகுக்கள் பல அரக்கர்களோடு தோன்றி யாகத்தை அழிக்க ஆரம்பித்தனர். முனிவர்கள் கலங்கினர். உடனே இராமர்

கவித்தனன் கரதலம் கலங்கல் நீரென
செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வ நாண்
புவித்தலம் குருதியின் புணரி ஆக்கினன்
குவித்தனன் அரக்கர்தம் சிரத்தின் குன்றமே

மற்றும்—

திருமகள் நாயகன் தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரில் ஒருவனைக் கடலில் இட்டதாங்
கொருவனை அந்தகப் புரத்தின் உய்த்ததே!

இப்படி அரக்கர்கள் அழிய, யாகம் நிறைவேறியது. முனிவர்கள் மகிழ்ந்து, இராமரைத் தழுவிப் புகழ்ந்தனர்.

## 3, வில் முறித்தல்.

விசுவாமித்திரர் அரசிளங் குமரரை மிதிலை மன்னனாகிய சனகருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். சனகர் தன் மகள் சீதையை இராமருக்குக் கொடுக்க விரும்பினர்.

ஆனால் அவர் தன்னிடம் இருந்த வில்லை வளைத்தவனுக்கே சீதையைக் கொடுப்பதாகச் சபதம் செய்திருந்தார். இளம் பிள்ளையாகிய இராமர் ஈசன் வில்லை எடுக்க முடியுமா என்று சனகர் வருந்தினர்.

விசுவாமித்திரர் இராமர் முகத்தைப் பார்த்தார். இராமர் எழுந்து வெகு கம்பீரமாக வில்லை நோக்கி நடந்தார். ஒரு பூமாலையை எடுப்பது போல் அதை எடுத்தார். சபையில் உள்ளோர் யாவரும் கண் கொட்டாமல் பார்க்கின்றனர்.

என்றாலும்—

தடுத்திமை யாமல் இருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.

அவ்வளவு விரைவாக இராமர் அதை வளைத்து நாண் ஏற்றினர். இவரது வேகத்தைத் தாங்காமல் வில் முறிந்து விழுந்தது. அண்டம் நடுங்க ஓசை உண்டாயிற்று.

சனகர் பேரானந்தம் அடைந்தார். திருமணத்துக்கு இனித் தடையேது? உடனே வருமாறு தசரதருக்குத் தூது அனுப்பினர்.

## 4. பரசு ராம பங்கம்,

திருமணம் முடிந்தது. தசரதர் தன் மக்களோடும் மருமக்களோடும் அயோத்திக்குப் புறப்பட்டார். இடையில் பரசுராமர் என்பவர் இராமரை மறித்துக் கொண்டார். "சீதையின் சொத்தை வில்லை முறித்த இராமா! என் வில்லை வந்த உன்னலாமா?" என்று கர்ச்சித்தார்.

பரசு ராமர் ஆயிரம் தோள்களுடைய கார்த்த வீர்யார்ச்சுனனைக் கொன்றவர். அன்றியும் அரச வம்சங்களை இருபத்தோர் தலைமுறை அழித்தவர். தசரதர் நடுங்கினர்.

இராமரோ அவர் கையில் இருந்த பெரும் வில்லை வெடுக்கென்று வாங்கிக் கொண்டார். அதை வளைத்து அம்பு பூட்டி "இதற்கு என்ன குறி?" என்று கேட்டார்.

பரசு ராமர் அவமானம் அடைந்தார். தன் தவத்தை அதற்குக் கொடுத்து இராமரைப் புகழ்ந்து போனர். இதை மாரீசன் இராவணனுக்கு எடுத்துக் கூறுகிறான்.

ஆயிரம் அடற்கையுடை யானைமழு வாளால்
ஏயெனும் இமைப்பிலுயிர் செற்றஎதி ரில்லோன்
மேயவிறல் முற்றும்வரி வெஞ்சிலையி னோடும்
தாயகன் வலித்தகைமை யாமுறு அகைத்தோ?

## 5. சயந்தனைத் தண்டித்தல்.

இராமர் வனவாசம் செய்கையில் தம்பியோடும் சீதையோடும் சித்திரகூட மலையில் தங்கி இருந்தார். ஒரு நாள் அவர் உறங்கிக் கொண்டிருந்தபொழுது இந்திரன் மகனான சயந்தன் காக்கை வடிவங்கொண்டு சீதையின் மேனியைக் கீறித் துன்புறுத்தினன். இரத்தம் வடிந்தது.

இராமர் விழித்துச் சீதையின் நிலையைக் கண்டார். கோபங் கொண்டார். பக்கத்தில் அம்பு ஒன்றும் இல்லை. உடனே ஒரு புல்லை எடுத்து பிரம்மாஸ்திர மந்திரத்தை உச்சரித்துக் காக்கைமேல் விடுத்தார்.

புல் துரத்தியது. காக்கை மூன்று உலகங்களிலும் சுற்றியது. அதைக் காப்பார் ஒருவரும் இல்லை. கடைசியாக இராமரிடமே அடைக்கலம் புகுந்தது.

இராமர் காக்கையைக் காத்தார். ஆனால் அஸ்திரம் வீணுகாமல் அதன் கண்களை அறுத்து ஒருமணியை நிறுத்தினார். இந்த அடையாளத்தை சீதை அசோக வனத்தில் மாருதிக்குச் சொல்லுகிறாள்.

நாகம் ஒன்றிய நல்வரை யின்தலை மேனாள்
ஆகம் வந்தெனை அள்ளுகிர் வாளின் அளைந்த
காகம் ஒன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய்.

## 6. கரதூஷண வதம்.

இராமர் பஞ்சவடியில் தங்கி இருந்தார். இராவணன் தங்கை சூர்ப்பநகை இவரைச் சந்தித்தாள். இவளுடைய தீய எண்ணம் இராமரிடத்தில் பலிக்கவில்லை.

சூர்ப்பநகை சீதையைத் தூக்கிக்கொண்டு போக முயற்சித்தாள். லக்ஷ்மணர் அவளைப் பங்கப்படுத்தினார். சூர்ப்பநகை கதறி ஓடிக் கரனிடம் முறையிட்டாள்.

கரன் தம்பிகளோடும் சேனைகளோடும் இராமரை எதிர்த்தான். இராமர் தான் ஒருவரே நின்று அத்தனை வீரர்களையும் மூன்று நாழிகையில் முடித்துவிட்டார். இந்த வெற்றியை சூர்ப்பநகை இராவணனிடம் விரிக்கின்றாள்.

சொல்லென்றன் வாயிற் கேட்டார் தொடர்ந்தெழு சேனையோடும்
கல்லென்ற ஒலியிற் சென்றார் கரன்முதல் காளை வீரர்
எல்லொன்று கமலச் செங்கண் இராமனென் றிசைத்த ஏந்தல்
வில்லொன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றாள்.

## 7. மரம் துளைத்தல்.

சீதையை இராவணன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். தேவியைத் தேடி வருகையில் இராமர் சுக்ரீவர் என்ற வானரத் தலைவரைக் கண்டார். அவரோடு நட்புக் கொண்டார்.

சுக்ரீவர் தனக்குத் தீங்கு செய்த வாலியை வெல்ல இராமருடைய உதவியை வேண்டினார். இராமரும் ஒத்துக் கொண்டார்.

என்றாலும் வாலியை வெல்ல இராமரால் ஆகுமா என்று சுக்ரீவர் சந்தேகித்தார். ஆதலால் தனக்கு நம்பிக்கை உண்டாகும் பொருட்டு மராமரங்களில் ஒன்றை அம்பால் துளைக்கும்படி இராமரை வேண்டினார்.

இராமர் புன்முறுவல் கொண்டார். வில் வளைத்து அம்பு பூட்டினார். ஒரு மரம் மட்டுமா?

ஏழு மாமரம் உருவிக்கீழ் உலகமென் றிசைக்கும்
ஏழும் ஊடுபுக் குருவிப்பின் உடனடுத் தியன்ற
ஏழி லாமையால் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபின் உருவுமால் ஒழிவதன் றின்னும்.

## 8. வாலி வதம்.

வாலி ஒரு வரம் பெற்றிருந்தான். இதனால் அவன் தன்னை எதிர்ப்பவரின் பலத்தை அபகரித்துக் கொள்ளக் கூடும். ஆகையால் ஆலோசனை செய்தார்கள்.

சுக்ரீவர் வாலியோடு சண்டை செய்வதென்றும் அப்பொழுது இராமர் மறைந்திருந்து வாலிமேல் அம்பெய்வதென்றும் தீர்மானமாயிற்று.

சுக்ரீவருக்கும் வாலிக்கும் போர் நடக்கிறது. இருவரும் ஒரே வடிவாகத் தோன்றினர். ஆதலால் இராமர் உடனே அம்பெய்ய வில்லை. சுக்ரீவர் தோற்று ஓடி வந்தார்.

இராமர் அவரைத் தேற்றினர். அடையாளத்திற்காக அவர் கழுத்தில் ஒரு மாலை இட்டு மறுமுறை போருக்கு அனுப்பினர்.

வாலி கோபங்கொண்டான். சுக்ரீவரை பூமியில் அடித்துக் கொல்ல எண்ணி உயரத் தூக்கிவிட்டான். மறு நிமிஷம் சுக்ரீவர் உயிர் போயிருக்கும்.

இராம பாணம் புறப்பட்டு வாலி மார்பில் புகுந்தது. எப்படிப் புகுந்தது? எப்பேர்ப்பட்டவன் மார்பில்?

காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழிய
சேரும் சூசியில் சென்றது நின்றதென் செப்பின்

நீரும் நீர்தரு நெருப்பும்வன் காற்றும்கீழ் நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன் உரத்தையப் பகழி.

வாலி சுக்ரீவரைக் கீழே விட்டான். இராமர் வெளிப்பட்டார். இராமரைப் போற்றி வாலி நற்கதி அடைந்தார்.

## 9. வருணன் வணக்கம்.

சீதையைத் தேட சுக்ரீவர் வானரர்களை அனுப்பினர். மாருதி என்பவர் தேவியை இலங்கையில் கண்டு வந்தார்.

ஆகவே இராமர் வானரச் சேனைகளோடு இலங்கைக்குப் பயணமானர். சமுத்திரம் குறுக்கிட்டது. எப்படிக் கடப்பது?

விபீஷணர் இராவணனுடைய தம்பி. இவர் இப்பொழுதுதான் இராமரிடம் வந்து சேர்ந்தார். இந்த விபீஷணருடைய யோசனையின்படி இராமர் சமுத்திர ராஜரிடம் வழி வேண்டினர். ஏழுநாள் தவங்கிடந்தார். வருணர் வரவில்லை. இராமர் கோபங்கொண்டார். அம்புகளைத் தொடுத்தார். எங்கும் புகையுந் தீயும் சூழ்ந்தது. சமுத்திரம் வற்றியது. என்றாலும் வருணர் வரவில்லை.

இராமர் அவரைக் கொல்ல நினைத்தார். பிரம்மாஸ்திரத்தை எடுத்தார். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா?

அண்டமூலத்துக்கப்பால் ஆழியும் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்பியென் தேவன் சென்னி
பண்டைநாள் இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள் பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் குளுகுளு கொதித்த தன்றே!

வருணர் ஓடிவந்து வணங்கினார். இராமர் அவரைக் காத்து, அவருடைய எதிரிகளைக் கொன்றார்.

## 10. மூலபல வதை.

வருணருடைய யோசனையின்படி இராமர் கடலில் அணைகட்டினார். சேனையோடு இலங்கை அடைந்தார். பெரும்போர் நடந்தது. இராவணன் தம்பி கும்பகருணன் மாண்டான். அவனுடைய மூத்த மகன் இந்திரசித்து இறந்தான். இராவணனுக்குச் சோகம் உண்டாயிற்று.

அப்பொழுது அவனுக்கு உதவியாக ஆயிரம் வெள்ளம் மூலபலம் வந்தது. அத்தனை பேரையும் இராமர் மீது ஏவினான்.

மூலபலத்தைக் கண்டு வானரர் ஓட்டம் பிடித்தனர். இராமர் அவர்களைச் சமாதானப்படுத்தினார். சேனைக் காவலைத் தம்பியிடம் ஒப்படைத்தார். தான் ஒருவரே மூலபலத்தை எதிர்த்தார். நாசப் படுத்துகிறார்.

நிற்க இராவணன் சண்டையிட்டுத் திரும்பும் சேனைகளுக்கு விருந்து செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். தூதர்கள் ஓடிவந்து சொல்லுகிறார்கள்.

இன்றியார் விருந்திங் குண்பார் இகல்முகத் திமையோர் தந்த
வென்றியாய் ஏவச் சென்ற ஆயிர வெள்ளச் சேனை
நின்றது புறத்த தாக ராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினால் இரண்டு மூன்று கடிகையின் உலந்த தென்றார்.

## 11. இராவணன் வதம்

### (1) முதல் போர்:—

முதல்நாள் போர் நடக்கிறது. அரக்கர் சேனை தளர்ந்தது. இராவணன் தேரேறி வந்தான். தலைவர்களை வென்றான். நிகரின்றி விளங்குகின்றான்.

இராமர் இராவணன் முன் தோன்றினார். அவனது சேனைகளை அழித்தார். ஆயுதங்களை ஒழித்தார். கை எடுக்க ஒட்டாமல் அடித்தார். தேர்களை உடைத்தார். அவன் கிரீடங்களையும் உருட்டினார்.

இராவணன் பதைக்கின்றான். ஆனால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. அப்பொழுது இராமர் அவனுக்குச் சில நீதிகளைப் போதித்து அனுப்பிவிடுகிறார்.

இராவணன் போகின்றான். எப்பேர்ப்பட்ட இராவணன்? எப்படிப் போகின்றான்?

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்,
தாரணி மௌலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை
புக்கான்

மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருந் தானை நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தானப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.

இராவணன் அரண்மனை அடைந்து, ஆத்திரமும் அவமானமும் பிடுங்கித் தின்ன, தனியே படுத்துக்கொண்டான்.

அவனுடைய பாட்டன் மாலியவான் அங்கு வந்து "இராவணா! இன்று போர் நடந்ததே, உன் கருத்து என்ன?" என்று கேட்டான்.

இராவணன் உடனே எழுந்து "பாட்டா! நான் எத்தனையோ ஆயுதங்களைப் பார்த்திருக்கிறேன்

இந்திரன் குலிச வேலும் ஈசன்கை இலைமூன் றென்னும்
மந்திர அயிலும் மாயோன் வளையெஃகின் வரவுங்கண்டேன்
அந்தரம் நீளி தம்மா! தாபதன் அம்புக் காற்றா
நொந்தனர் யான லாதார் யாரவை நோக்க கிற்பார்.

உற்பத்தி அயனே ஒக்கும் ஓடும்போ தரியே ஒக்கும்
முற்பத்தின் அரனே ஒக்கும் பகைஞரைக் கலந்த காலை
சிற்பத்தை நம்மால் பேசச் சிறியவோ என்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த என்றால் பிறிதொரு சான்றும்
உண்டோ?

அன்றியும் சீதை நம்மை நிராகரிப்பதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது?

போயினித் தெரிவ தென்னே பொறையினால் உலகம்
போலும்
வேயெனத் தகைய தோளி ராகவன் மேனி நோக்கித்
தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்!

இப்படி இராவணன் முதல் போரில் தன் அனுபவத்தைக் கூறி இராமனைப் புகழக் காண்கிறோம்.

(2) கடைப்போர்

இராமருக்கும் இராவணனுக்கும் கடைசிப் போர் நடக்கின்றது. இருவருடைய தேர்களும் மூவுலகங்களிலும் திரிகின்றன. இராவணன் தன் வல்லமை எல்லாம் காட்டுகின்றான். யாவும் வீணுகின்றன.

ஒருசூலத்தை எறிந்தான். இராமர் ஒரு ஊங்காரம் செய்தார். சூலம் பொடிப் பொடியாய் உதிர்ந்தது. இராவணன் ஆச்சர்யத்தோடு சொல்லுகிறான்—

சிவனோ அல்லன், நான்முகன் அல்லன், திருமாலாம்
அவனோ அல்லன், மெய்வரம் எல்லாம் அடுகின்றான்,
தவனோ என்னில் செய்து முடிக்கும் தரமல்லன்,
இவனோ தானவ் வேத முதற்கா ரணமென்றான்.

இராமர் இதுவரை இராவணனுடைய ஆயுதங்களைத் தடுத்துக்கொண்டு தற்காப்பில் நின்றார் இப்பொழுது தானே போர்செய்ய ஆரம்பித்தார். இராவணனுடைய தலைகளையும் கைகளையும் அறுத்தார். அவை மீண்டும் மீண்டும் முளைத்தன. அவன் உடல் முழுதும் துளைத்தார். இராவணன் சற்று மயங்கினுன். பிறகு தெளிந்தான். மரணம் அடையவில்லை.

கடைசியாக இராமர் இராவணனைக் கொல்ல எண்ணிப் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தார். அது என்ன செய்தது?

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந்தவமும்,
முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும், ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும்
தின்று, மார்பில்
புக்கோடி, உயிர்பருகிப், புறம்போயிற் றிராகவன்தன்
புனித வாளி.!

இராவணன் வீழ்ந்தான். மூவுலகங்களும் பயம் நீங்கிக் களித்தன. தேவர் முதல் யாவரும் இராமரைப் புகழ்ந்து போற்றினர்.

இப்படி முக்கியமாகப் பதினேரிடங்களில் இராமருடைய வீரத்தின் மேன்மையைக் கண்டோம்.

இதனல்தான் கவிகள்—

நாடிய பொருள் கைகூடும், ஞானமும் புகழும் உண்டாம்,
வீடியல் வழிய தாக்கும், வேரியங் கமலை நோக்கும்,
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வார்க்கே

என்று இராமருடைய தோள் ஆற்றலைச் சிறப்பித்துப் போற்றுகின்றனர்.

பலமற்றவனுக்கு இவ்வுலகில் ஒரு இன்பமும் இல்லை. இவனுக்கு ஆத்மஞானமும் சித்திக்காதென்று உபநிஷத்து கூறுகிறது. ஆகையால் தேக பலத்தையும் மனோதிடத்தையும் பெறுவது நமது முதற்கடமை என்று இராம சரிதம் போதிக்கின்றது.

## II. பரிசுத்தம்

இராமருடைய திருமேனி பரிசுத்தம் வாய்ந்தது. இதனல் பலர் பாபத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலை பெற்றதை சரிதம் விளக்குகிறது.

## 1. அகலிகை சாப விமோசனம்

மிதிலைக்குச் செல்லும் வழியில் விசுவாமித்திரர் இராமரை ஒரு சோலைக்கு இட்டுச் சென்றார். அங்கு ஒரு கல் கிடந்தது. அதன்மீது இராமருடைய பாதம் பட்டது. உடனே கல் மறைந்தது. ஒரு அழகிய மாது முன் நின்றாள். இவள் யார் என்று இராமர் கேட்டார். முனிவர் விளக்குகிறார்.

"கௌதம முனிவரும் அழகுடைய அகலிகையும் இல்லறம் நடத்தி வந்தனர். இந்திரன் அகலிகையிடம் துர் எண்ணங் கொண்டான். முனிவர் இல்லாத சமயத்தில் அவரைப்போல் வடிவங்கொண்டு ஆச்ரமத்தில் நுழைந்தான். அகலிகை இந்திரனை உணர்ந்து கொண்டாள். என்றாலும் உடன்பட்டிருந்தாள்.

கௌதமர் கோபத்தோடு வந்தார். தப்பியோட முயன்ற இந்திரனுக்குச் சாபம் கொடுத்தார். அகலிகையைக் கல்லாக்கினார். இந்தக் கல் உருவம் இராமா! உன்னால் தீரும் என்றும் சொன்னார்.

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவதுண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலேஉன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன்

என்று விசுவாமித்திரர் இராமருடைய தோளின் பலத்தையும் தாளின் புனிதத்தையும் புகழ்ந்து மகிழ்கின்றார்.

## 2. விராதன் தும்புரு ஆகுதல்

இராமர் தம்பியோடும் தையலொடும் தண்டக வனத்தில் நுழைந்தார். அங்கு விராதன் என்ற பலம் பொருந்திய அரக்கன் எதிர்ப்பட்டான். அவன் சீதையைத் தூக்கிக்கொண்டு ஓடினான். இராமரும் தம்பியும் அவனை வளைத்தனர். அவன் சீதையை விட்டு இருவரையும் எதிர்த்தான்.

இருவரும் அவனது தோள்களை வீசினர். விராதன் இவர்களை விழுங்க வந்தான். இராமர் அவனைத் தன் காலால் எற்றினார். ஆச்சர்யம்! அரக்க உருவம் நீங்கியது. வானில் ஒரு அழகிய வடிவம் தோன்றியது.

அவன்—

கடுத்த காரங் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்த திசை அனைத்தினும்போய் ஒலிகொள்ள உறு
துயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேயென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோஅன் றேனென்றாய்!

என்று புகழ்ந்து "இராமா! நான் தும்புரு என்ற இயக்கன். குபேரன் சாபத்தால் அரக்கன் ஆனேன். உம்முடைய பாதம் பட்டதால் சாபம் நீங்கி பழைய வடிவம் பெற்றேன்" என்று வணங்கிப் போகிறான்.

## 3. கவந்தன் சாப விமோசனம்

இராமரும் இளையவரும் சீதையைத்தேடி வனத்தில் அலைந்தனர். அங்கு விகாரமான அரக்க வடிவமுடைய

கவந்தனைக் கண்டனர். கவந்தன் இவர்களை விழுங்க முந்தினான். இருவரும் அவனது நீண்ட கைகளை வெட்டினர்

இராமருடைய கை பட்டவுடன் அவனுடைய அரக்க உருவம் விட்டது. ஒளியுடைய வடிவோடு ஆகாயத்தில் நின்று வணங்கி—

ஈன்றவனே எப்பொருளும், எல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே, தேவர் தவத்தின் தனிப்பயனே,
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ,
தோன்றி இருவினையேன் சாபத்திடர் துடைத்தாய்.

என்று புகழ்கின்றான். இளையவர் அவனை யாரென்று வினவ—

சந்தப்பூண் அலங்கல் வீர தனுவெனும் நாமத் தேனோர்
கந்தர்ப்பன் சாபத் தாலிக் கடைப்படு பிறவி கண்டேன்
வந்துற்றீர் மலர்க்கை தீண்ட முன்னுடை வடிவம் பெற்றேன்
எந்தைக்கும் எந்தை நீரே இசைப்பது கேண்மின்
என்றான்.

## 4. சம்பாதி இறகு வளர்தல்

சீதையைத் தேடித் தென்திசையில் சென்ற வானரர் சமுத்திரக் கரையை அடைந்தனர். இனித் தேட இடமில்லை. வெறுங்கையோடு திரும்ப மனமில்லை. தற்கொலை செய்து கொள்ள யோசித்தார்கள்.

மாருதி அவர்களைத் தடுத்து "தேவியை மீட்கும் வகையில் சடாயுவைப் போல் உயிர் விடுவதே ஆண்மை" என்று உபதேசித்தார்.

இதை அங்கொரு கிழக் கழுகு கேட்டிருந்தது. அதன் இறகுகள் கரிந்து உதிர்ந்து போயிருந்தன. அது வானரரை நோக்கித் தத்தித் தத்திக் கொண்டு வந்து 'சடாயு எப்படி இறந்தான்?' என்று கேட்டது.

மாருதி.—நீயாவன்? அரக்கனே?

கழுகு—இல்லை ஐயா! நான் சடாயுவுக்கு முன்பிறந்தவன். என்பெயர் சம்பாதி.

மாருதி—சம்பாதி! உமக்கு நமஸ்காரம். உமது தம்பி சீதையை மீட்கும் பொருட்டு இராவணனேடு போரிட்டு மாண்டார்.

சம்பாதி— நல்லது, நல்லது. தரும காரியத்தில் உயிர் விட்ட என் தம்பி இறந்தவனே அல்ல. அவன் என்றும் புகழோடு வாழ்வான். நீங்கள் யார்? என் உயிர்விடத் துணி கின்றீர்கள்?

மாருதி—நாங்கள் இராம தூதர். சீதையைத் தேடி வந்தோம்.

சம்பாதி—நண்பர்களே! நீங்கள் இராம தூதர்களா? அப்படியானல் எனக்கு உபகாரம் செய்யுங்கள். ஒரு காலத்தில் என் தம்பியும் நானும் வான மண்டலங்களைக் காண உயரப் பறந்தோம். சூரிய வெப்பத்தால் என் தம்பி தவித்தான். நான் அவனை இறகுகளால் மறைத்துக் கொண்டு பறந்தேன். என் இறகுகள் கரிந்து உதிர்ந்தன. நானும் கீழே விழுந்தேன். வானரரால் இராம நாமத்தைக் கேட்கும் போது சிறகு வளரும் என்று அப்பொழுதே எனக்குச் சொல்லப்பட்டது. நீங்கள் அனைவரும் தயவு செய்து

அந்தப் புனித நாமத்தைச் சொல்லி எனக்கு உதவி செய்யுங்கள்.

சம்பாதி இப்படிச் சொல்லவே அந்த அற்புதத்தைக் காண வானரர் ஆவல் கொண்டனர்.

என்றான் அன்னது காண்டும் யாமென
நின்றார் நின்றுழி நீல மேனியான்
நன்று நாமம் நவின்று நல்கினர்
வன்தோ ளான்சிறை வானந் தாயவே

இராம நாமம் கேட்கவே சம்பாதிக்கு இறகு வளர்ந்தது. இப்படி இறகு வளர்ந்த சம்பாதி சீதை இலங்கையில் இருப்பதை அறிவித்துப் பறந்து போனார்.

இவ்வாறு நான்கு இடங்களில் இராமருடைய புனிதத் தன்மை வெளிப்படுகிறது. இந்தப் புனிதம் நமக்கு எப்படி உண்டாகும்?

"புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்."

என்றார் திருவள்ளுவர். இராமர் இந்த சத்தியத்தையே கடைப்பிடித்து நடந்தார்.

நாமும் சத்திய எண்ணத்தையும், சத்திய மொழியையும், சத்தியச்செயலையும் கைக்கொண்டால் புனிதம் அடையலாம் அல்லவா?

## III. தியாகம்

தசரதர் இராமருக்கு முடிசூட்ட விரும்பினார்: மந்திரிகளோடு ஆலோசித்தார். அவர்கள் இதை சந்தோஷத்தோடு வரவேற்றனர்.

தசரதர் மகனை அழைத்து "இராமா! நீ இந்த அரசை ஏற்றுக்கொண்டு என்னைத் தவத்திற்கு அனுப்பு" என்று வேண்டினார். ஒரு சிறு பதவி கிடைத்தால் நம் மனம் எப்படி துள்ளுகிறது? சக்கரவர்த்தி பதவி வலிய வரும்போது இராமர் மனம் எப்படி இருந்தது? குதூகலித்ததா?

தாதை அப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடனிதென்றுணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவிய அதுசெயல் அன்றோ
நீதி ஏற்கென நினைந்தும் அப்பணி தலைநின்றான்

**காதல் உற்றிலன்**

இராமர் ஏன் காதல் உறவில்லை? வசிட்டர் அவருக்குச் சொல்லி இருக்கிறார்.—

மண்ணாடும் மன்னவரும் அவர்தனமும் மாண்டதுநுண் மணலை ஒக்கும்
விண்ணாடும் இந்திரரும் அவர்வாழ்வும் வீந்தனவிண் மீனை ஒக்கும்
எண்ணாடும் பிரமரும் அண்டமும் பூதங்கள் இறந்ததோ எல்லை இல்லை
கண்ணாடும் இவைஎங்கே நின்வாழ்க்கை நிலையென்னோ கவலும் நெஞ்சே

(வாசிட்டம், சனகன் கதை)

போகங்களும் பதவிகளும் நம் மனத்தைக் கவர்கின்றன. இவற்றிற்காகப் போட்டியும் சண்டையும் போடுகின்றோம். ஆனால் இவை நிலையற்றவை. அறிவாளிகள் இதில் மயங்கார். இயற்கையிலேயே பேரறிவுடைய இராமர் இதில் மயங்காமலிருந்தது ஆச்சர்யமல்லவே!

இகழ்ந்திலன்

அரசில் ஆசை இல்லை என்றால், அதை வேண்டாம் என்று இராமர் மறுத்தாரா? இல்லை. ஏன்? கிருஷ்ணர் அருச்சுனருக்குச் சொல்லுகிறார்—

பெரியவர் பயின்ற படியலால் பயிலார் பின்புளோர்
என்பதன் றாயின்.
உரிய இவ் வுலக மூன்றினும் எனக்குச் செய்யவேண்
டுவ தொன் றுண்டோ?
அரியவை என்னால் உறுதவை உறுதற் பாலவும்
யாவையிங் கையா!
பரியயிவ் வுலக மகிழ்வுடன் வினைதான் பண்ணுதற்
கென்னையும் பாராய்!

அன்றியும்—

என்செயல் தவறில் யான்செயா வினைகள் யாவரும்
செயார் அதனால்
மன்செய்த குலங்கள் மயங்கிமாய்ந் திடுவர் மற்றவர்
மற்றதற் காகப்
பின்செயல் அறியா தவாவொடுமுயலும் பேதையைப்
போல் பிறர் பொருட்டால்
உன்செயல் களைச்செய் அவைசெய்வார் தம்மின் உணர்
வைவே றுக்கலும் ஒழிவாய்.

(பகவத் கீதை—அத்—3.)

எனவே ஆசையற்ற ஞானிகளும் உலக உபகாரத்திற்காகத் தங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஆசை இல்லாமையால் வேலையை விட்டுவிடுவது சந்நியாசம். ஆசை இல்லாமலும் கடமையைச் செய்வது தியாகம்.

விருப்பு வெறுப்பு விடுத்து வினைகள்
திருத்தல் இங்கு தியாகம் என்ப.

இராமர், கிருஷ்ணர், அருச்சுனர், வசிட்டர், அத்திரி, பிருகு, காசிபர், ஞானசம்பந்தர், சுந்தரர், தேசிகர், திருவள்ளுவர் யாவரும் ஆசையற்று உலகத்திற்கு வழிகாட்டிகளாக, இல்லறத்திருந்த தியாகிகளே. வள்ளுவர் கேட்கிறார்—

"அறத்தாற்றில் இல்வாழ்க்கை ஆற்றில் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்?"

ஆகையால் நாமும் இல்லறத்தை வலுப்படுத்துவது அவசியமல்லவா?

'இல்லறம் அல்லது நல்லறம் அன்று.' (ஔவை)

## IV. தந்தை சொல் காத்தல்.

இராமருக்கு மகுடம் என்று தசரதர் பறைசாற்றுவித்தார். ஜனங்கள் பூரித்தனர். மந்தரை என்ற கூனி மட்டும் கோபித்தாள். இவள் கைகேயி மனத்தைக் கலைத்தாள்.

கைகேயி தசரதரிடம் இரு வரங்கள் பெற்றிருந்தாள். இவற்றால் தன்மகன் பரதன் நாடாளவும் இராமர் காடாளவும் வற்புறுத்தினாள். மறுக்க மாட்டாமல் இசைந்து தசரதர் சோர்ந்து வீழ்ந்தார்.

இது அந்தப்புரத்தில் நடந்தது. ஜனங்கள் இதை அறியாமல் மகுடாபிஷேகம் காண மண்டபத்தில் கூடி

இருந்தனர். தசரதர் வரவில்லை. அவரை அழைத்து வரும்படி வசிட்டர் சுமந்திரரை அனுப்பினார். சுமந்திரர் கைகேயியைச் சந்தித்தார். கைகேயி இராமரைக் கூட்டி வரும்படி கட்டளை யிட்டாள். உடனே இராமர் வந்து வணங்கி "அம்மா! எனக்கு என்ன கட்டளை"? என்று கேட்டார் கைகேயி சொல்லுகிறாள்—

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் அரசன் என்றாள்

இராமருக்கு எப்படி இருக்கும்.? எப்படி இருந்தது.?

இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த சேந்தா மரையினை வென்ற தம்மா!

இராமருடைய அகம் எப்படி இருந்தது?

தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற் றிறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே
றருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்த தொத்தான்

இப்படி முகம் மலர்ந்து, அகம் மகிழ்ந்து இராமர் "அம்மா! அரசர் கட்டளை என்று சொல்ல வேண்டுமா?

மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ

என்னினி உறுதி அப்பால் இப்பணி தலைமேல் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்.

என்று புறப்பட்டார்.

கைகேயி பொய் பேசவில்லை; இது தசாதரின் கட்டளையே என்று இராமர் உணர்ந்தார். தசாதர் தன்னிடம் மிக்க அன்புள்ளவர். தானே வலிய அரசை அளித்தவர். இப்படித் திடீரென்று மாறக் கூடியவரல்ல. அப்படி மாற வேண்டுமானால் அவர் ஏதோ சத்தியத்தில் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

தன்னிடம் அன்பு மிகுந்த, தருமம் நிறைந்த, தந்தையின் சத்தியத்தை நிலை நிறுத்தல் தனது கடமை என்று கொண்டார். இதற்காக எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சந்தோஷத்தோடு ஏற்பதென்று தீர்மானித்து வனத்துக்குப் புறப்பட்டார்

நாமும் தாய் தந்தையரின் தருமத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமே.

## V. சர்வ சகோதரத்துவம்.

### 1. குகர்

இராமர் கங்கையை அடைந்தார். அங்கு ஓடம் விடுகிற வேடர் தலைவராகிய குகர் அவரிடம் மிகவும் அன்பு காட்டினார். "இராமா! சக்கரவர்த்திக் கோலத்தோடு பார்க்க வேண்டிய உன்னை இப்படிப் பார்க்கும்படி பாவம் செய்த கண்களைப் பிடுங்கி எறியாமல் இருக்கிறேனே" என்று குகர் வருந்தினார்.

கங்கையைக் கடக்க ஓடம் கொண்டு வரும்படி இராமர் குகனைக் கேட்டார். குகர்—

தேனுள, தினையுண்டால், தேவரும் நுகர்தற்காம்
ஊனுள, துணைநாயேம் உயிருள, விளையாட
கானுள, புனலாடக் கங்கையும் உளதன்றோ?
நானுள தனையும்நீ இனிதிரு நடவெம்பால்

என்று வேண்டினார். இராமரோ தென் திசையில் யாத்திரை செய்து வர வேண்டும் என்று வற்புறுத்தினார். அப்படியானால் தன்னையும் அழைத்துச் செல்லும்படி குகர் மன்றாடினார். அப்பொழுது—

அன்னவன் உரைகேளா அமலனும் உரை நேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவலுன் இளையான் இந்
நன்னுதல் அவள்நின் கேள் நளிர்கடல் நிலம் எல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன்,

என்று இராமர் அன்புக்குக் கட்டுப்பட்டு குகனைச் சகோதரராக ஏற்றுக்கொண்டார். பின்னும் "குகா! நீ என்னைத் தொடர்ந்தால் நமது வேடரை யார் காப்பார்? அயோத்தியை உன் தம்பி பரதன் காக்கின்றான். நீயும் எனது ஆணையை மீறாமல் இங்கு நமது சுற்றத்தாரைக் காத்திரு. மீண்டும் உன்னைச் சந்திக்கின்றேன்" என்று பிரியா விடை கொண்டு புறப்பட்டார்.

## 2. சுக்ரீவர்

மதங்க மலையில் இராமர் சுக்ரீவரோடு நட்புக் கொண்டார். சுக்ரீவர் தன்குறையை முறையிட்டார். "இராமா என் அண்ணன் வாலி மிக பலசாலி. அவன் குற்றமற்ற

அவன் குற்றமற்ற என்னைத் துரத்தி அடித்தான். நான் உலகெங்கும் அலைந்து இந்த மலையில் வந்து ஒதுங்கி யிருக்கிறேன். வாலி இங்கு வரக்கூடாதபடி ஒரு சாபம் இருக்கிறது. இதனால் நான் இன்னும் உயிர் தாங்கி இருக்கிறேன். என் மனைவியையும் அவன் அபகரித்துக் கொண்டான். எனக்கு வேறு கதி இல்லை.

'சரணுனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம் என்றான்'

உடனே இராமர் அவனை அணைத்துக்கொண்டு—

மற்றினி உரைப்ப தென்னை வானிடை மண்ணின் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோ
டுற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதென் காதல்
சுற்றமுன் சுற்றம் நீயே இன்னுயிர்த் துணைவன் என்றான்.

அன்றியும் வாலியைக் கொன்று அரசையும் மனைவியையும் திருப்பித் தருவதாக வாக்களித்தார். அப்படியே நிறைவேற்றினர்.

## 3. விபீஷணர்.

விபீஷணர் இராவணனுடைய தம்பி. சீதையை விட்டு விடும்படி அண்ணனிடம் வற்புறுத்தினர். இராவணன் கோபங்கொண்டு இவரை நிராகரித்தான்.

விபீஷணர் இராமரிடம் அடைக்கலம் புகுந்தார். இவரை ஏற்றுக் கொள்வதா தள்ளிவிடுவதா என்று இராமர் நண்பரோடு கலந்து ஆலோசித்தார்.

"இவன் துஷ்டனுடைய தம்பி. அகாலத்தில் வந்தவன். இவனைச் சேர்த்துகொள்வதால் நன்மை இல்லை. தீமை

உண்டாகும்'' என்றனர் வானரர். மாருதி மட்டும் அவரை ஏற்றுக் கொள்வதே தகுதி என்று வாதித்தார். கடைசியில் இராமர் தனது அழகிய கருத்தை வெளியிடுகிறார்.

மற்றினி உரைப்ப தில்லை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி அன்ன தன்றெனில் பிறிதொன்றாலும்
வெற்றியே பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க,
பற்றுதல் அன்றி உண்டோ புகலெனப் பகர்கின் றானே.

இன்றுவந் தானென் றுண்டோ? எந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தானென் றுண்டோ புகலது கூறு கின்றான்
தொன்றுவந் தன்பு பேணும் துணைவனும் அவனே பின்னைப்
பின்றுமென் றாலும் நம்பால் புகழன்றிப் பிறிதுண் டாமோ?

பிறந்தநாள் தொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டே? என்னைச் சரணென்று வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்று வந்து துன்னினான் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்றே என்றும் இருந்தநாள் ஆவ தென்றான்.

ஆதலால் அபயம் என்ற பொழுதத்தே அபய தானம்
ஈதலே கடப்பா டென்ப தியம்பினீர் என்பால் வைத்த
காதலால், இனிவே றெண்ணக் கடவதென்? கதிரோன் மைந்த!
கோதிலா தவனை நீயே என்வயிற் கொணர்தி என்றான்.

சுக்கிரீவர் விபீஷணரை அழைக்கச்சென்றார். விபீஷணர் இராமரடியில் வந்து வீழ்ந்தார். இராமர் அவருக்கு ஆஸனம் கொடுத்து—

ஆழியான் அவனை நோக்கி அருள்சுரந் துவகை தூண்ட
எழினோ டேழாய் நின்ற உலகுமென் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்
என்றான்.

உடனே விபீஷணருக்குப் பட்டம் கட்டும்படி இராமர் தம்பிக்குக் கட்டளை இட்டார். விபீஷணர் பெரு மகிழ்ச்சி அடைந்து சொல்லுகிறார்—

"சுவாமி! நான் வஞ்சகனாகிய இராவணனுக்குத் தம்பியாகப் பிறந்தேன். இந்தப் பாதகம் தீரும் பொருட்டு, பரதனுக்குச் சூட்டியபடியே, எனக்கும் உமது பாதுகையை முடியாகச் சூட்ட வேண்டும். இதுவே எனக்கு அழியாத செல்வம் ஆகும்" என்று வேண்டினார்.

இராமர் உடனே எழுந்து அவரைத் தழுவிக்கொண்டு—

குகனொடும் ஐவர் ஆனோம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம், எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்,
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை

குகர் ஒரு வேடர் தலைவர். சுக்ரீவர் குரக்கரசர். விபீஷணர் அரக்கர். சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமர் இவர்களிடத்தில் சகோதரத்துவம் கொள்கிறார். சர்வ சகோதரத்துவக் கொள்கை இராமரிடம் நிறைந்து இருக்கிறது.

இவர்களிடை தோற்றத்தாலும், குணத்தாலும் பல வேற்றுமைகள் இருந்தன. என்றாலும் அன்பால் மனத்தில் அழியாத ஒற்றுமை வளர்ந்தது. உலகில் எக்காலத்தும் பல வேற்றுமைகள் இருக்கும்.

குலத்தாலும் குணத்தாலும் குறித்தனவே
குறித்தபடி கொண்டு கூட்டும்
வலத்தாலும் மதியாலும் வளர்கின்ற
கல்வியொடு செல்வம் என்னும்
நலத்தாலும் புலத்தொழுக்க நடையாலும்
கொடையாலும் நானா வாக
நிலத்தாரும் மனிதரெல்லாம் பிரிந்திருப்பர்
எந்நாளும் நிலையி தாமே!

இப்படி வேற்றுமை இருப்பதாலேயே விரோதம் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எப்படி நடக்கலாம்?

ஏற்றமொடு தாழ்வென்ன இவ்வகையே
எந்நாளும் இருந்திட் டாலும்
மாற்றலாய்ப் பகைத்தொருவர்க் கொருவர்மனம்
மாறுகி மடிதல் வேண்டா
ஆற்றலுடைப் பெரியோர்கள் எளியோரைக்
கைதூக்கி அணைக்க அன்னோர்
ஏற்றமுடைப் பெரியோரை எதிர்பேணி
வாழ்வரிது இனிதே அம்மா!

வேற்றுமைகள் கொண்டாடி மமதையொடு
வாழ்வதெல்லாம் வீழ்ந்து போகும்
மேற்றுமைகள் அனைத்தினையும் ஒழிக்கவரு
முயற்சியதும் வீணே ஆகும்
வேற்றுமைகள் இருந்தாலும் அவற்றிடையே
ஒற்றுமையை விழைந்து காண்மின்
வேற்றுமையில் ஒற்றுமையே விளங்குகின்ற
இயற்கையுடை விதிய தாமே!

"Unity in diversity is the law of Nature."
(Swami Vivekananda)

# VI பகைவரிடத்தில் அன்பு.

## 1. இராவணன்.

முதல் நாள் போரில் இராமர் முன்னே இராவணன் தோற்று நிற்கின்றான். இவன் எவ்வளவு தீங்கு செய்தவன்?

தேசியைச் சிறையில் வைத்தான் தேவரை இடுக்கண் செய்தான்
பூசுரர்க் கலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையுள் ளளவும் எல்லா உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவுங் கொண்டான் வழியிலா வழிமேற் செல்வான்

இராமர் அவனைப் பார்த்து "இராவணா! அதருமத்தினால் வெல்ல முடியாது. உன்னை இதோ ஒரு அம்பினால் கொல்லக் கூடும். என்றாலும் உன்னைக் கண்டு இரங்குகிறேன். இப்பொழுதாவது சீதையைக் கொண்டு வந்து விட்டு விடு. இனியும் வெல்லலாம் என்று எண்ணுகிறாயா? உன் சேனைகள் எப்படி ஆயின பார்த்தாயா?

ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்.

இப்படித் தனக்குப் பெருந்தீங்கு இழைத்த இராவணனிடம் இராமர் கருணை காட்டி அனுப்பக் காண்கிறோம்.

## 2. கைகேயி.

நற்புத்தி கேளாத இராவணன் கடைசி வரை போரிட்டு மாண்டான். சீதை சிறை மீட்கப் பட்டாள். தேவி இராமரைக் கண்டு களித்தாள். இராமர் சீதையைக் கண்டு பெருங் கோபங் கொண்டு நிராகரித்தார். தேவி தீக்குதித்தாள். அக்கினி பகவான் சீதையை ஏந்தி வந்து அவளுடைய புனிதத்தை வெளிப்படுத்தினார். பிரம்மாதி தேவர்கள் அங்கு வந்து இராமரைப் புகழ்ந்து தேவியின் மேன்மையை வெளியாக்கினர்.

அங்கு ஈசனுணையால் தசரதரும் வந்தார். அவர் சீதையைத் தேற்றி, இராமரை அணைத்துக் கொண்டு 'குழந்தாய்! நீ என் சத்தியத்தைக் காத்ததால் நான் சத்திய லோகத்தில் வாழ்கின்றேன். நான் வணங்கி வந்த தேவரும் மூவரும் என்னை வணங்குகின்றனர். பேருதவி செய்த உனக்கு ஒரு வரம் கொடுக்க விரும்புகிறேன். ஏதாவது ஒன்று கேட்டுக் கொள்" என்றார்.

இராமர் "எந்தையே! எனக்கு ஒரே குறை இருந்தது. உமது மரண காலத்தில் சமீபத்தில் இருக்கக் கூடவில்லை. சுவர்க்கத்தில் தான் சந்திக்கலாம் என்றிருந்தேன். என் நல்வினைப் பயனால் இப்பொழுதே உம்மைக் கண்டேன். இனி எனக்கு என்ன தேவை இருக்கிறது" என்று சொன்னார்.

தசரதர் இராமரை வற்புறுத்தினார்.

ஆயினும் உனக் கமைந்ததொன் றுரையென, அழகன்
தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய் திறந்தெழுந் தார்த்தன உயிரெலாம் வாழ்த்தி!

தசரதர் கைகேயியையும் பரதனையும் நிராகரித்திருந்தார். எப்பொழுது?

இராமருக்கு முடி சூட்ட ஏற்பாடு செய்து விட்டு தசரதர் கைகேயி யிடம் வந்தார். கைகேயி தான் பெற்றிருந்த இரு வரங்களால் பரதன் நாட்டை ஆளவும் இராமர் காட்டிற் கேகவும் வற்புறுத்தினாள். தசரதர் கலங்கினார். பரதனுக்கு அரசளிக்கத் தடையில்லை. ஆனால் இராமரைக் காட்டிற்கு அனுப்பவோ, அந்தோ! பரிதபித்தார். கைகேயியின் காலில் விழுந்து மன்றாடுகிறார்.

நின்மகன் ஆள்வான் நீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வயம் ஆமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்கட்கும்
நன்மகன் இந்த நாடிற வாமை நய வென்றான்

மெய்யே என்தன் வேரற நூறும் வினை நோக்கி
நையா நின்றேன், நாவும் உலர்ந்தேன், நளினம்போல
கையான் என்தன் கண்ணெதிர் நின்றும் கழிவானேல்
உய்யேன் நங்காய்! உன்னப யம்என் உயிர் என்றான்.

கைகேயி மனம் இரங்க இல்லை.

இன்னே பலவும் பகர்வான் இரங்கா தாளை நோக்கிச்
சொன்னேன் இன்றே இவளேன் தாரம் அல்லள் துறந்தேன்
மன்னே ஆவான் வருமப் பரதன் தனையும் மகனேன்
றுன்னேன் முனிவா! அவனும் ஆகான் உரிமைக் கென்றான்.

இப்படி நிராகரிக்கப் பட்ட இருவரையும் மறுபடி ஏற்றுக் கொள்ளும்படி இராமர் வரம் வேண்டுகிறார். தசரதர் குற்றமற்ற பரதனை உடனே ஏற்றுக் கொண்டார். இரக்க

மற்ற கைகேயியை ஏற்க மறுத்தார். என்றாலும் இராமர் வற்புறுத்தி மன்றாடி, கைகேயியையும் அங்கீகரிக்கச் செய்கிறார்.

கைகேயியோ தன்முடியைப் பறித்துக் காட்டிற்கு அனுப்பியவள். அன்றியும் தசரதரால் நிராகரிக்கப்பட்டு நரகம் அடைய இருப்பவள். தருமமுடைய புருடனால் நிராகரிக்கப்பட்ட மனைவிக்குச் சுவர்க்கம் இல்லை அல்லவா?

தனக்குத் தீங்கிழைத்தவளும், தீங்கடைய இருப்பவளுமான கைகேயிக்கு இராமர் நன்மை செய்கிறார். இப்படியே இராவணனிடமும் கருணை காட்டக் கண்டோம்.

நன்மை செய்தவருக்கு நன்மை செய்தல் மிருகங்களுக்கும் இயற்கை. ஆனால் தீமை செய்தவருக்கும் நன்மை செய்தலே மனிதத்தன்மை. இதுவே தெய்வ குணம். இதுவே அறிவாளிகளுக்கு அழகு.

> இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ அறிவு? —குறள்

என்று திருவள்ளுவர் கேட்கிறார். ஆதலால் தீமையை நன்மையால் வெல்வோமாக.

## VII தன்குற்றம் உணர்தல்.

இராமர் வாலியை வதைத்துச் சுக்ரீவருக்கு அரசளித்தார். சுக்ரீவர் பட்டங் கட்டிக் கொண்டு வந்து இராமரை வணங்கினார்.

இராமர் அவருக்கு அரச நீதிகளைப் போதிக்கின்றார். "சுக்ரீவா! உன் ராஜ்யத்தில் யாரையும்—

சிறியரென் றிகழ்ந்து நோய்வு செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகழ்ந் தியானொர் தீமை இழைத்தலால் உணர்ச்சி நீண்டு

குறியதாம் மேனி யாய கூனியால் குவவுத் தோளாய்!
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்
தேன்.

"எனது அறியாப் பருவத்தில் கூனி என்ற தாதியை உண்டை வில்லால் அடித்து விட்டேன். அவள் வஞ்சங் கொண்டாள். தக்க சமயத்தில் கைகேயியைக் கலைத்து எனக்குத் தீங்கு செய்தாள் அல்லவா?

"ஆகையால் ஏழைகளையும் பலமற்றவர்களையும் இகழ்ந்து வருத்தாமல் சாக்கிரதையாய் இரு!" என்று இராமர் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு சுக்ரீவருக்கு நல்வழி காட்டுகிறார்.

மனிதன் சுலபமாகப் பிறரிடங் குற்றம் காண்கிறான். ஆனால்—

ஏதிலார் குற்றம் போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? —திருவள்ளுவர்

ஆகையால் தன்னைத் திருத்திக் கொண்டு பிறரைத் திருத்துபவனே அறிவாளி. தன் குற்றத்தை ஒத்துக் கொள்ளப் பின் வாங்காதவனே தீரன்.

## VIII ஏகபத்தினி விரதம்.

திருமணத்துக்கு முன்பு இராமர் நெறியான பிரமசரியத்தை அநுஷ்டித்தார். சீதையை மணந்த அன்றே ஏக பத்தினி விரதத்தை எடுத்துக்கொண்டார்.

தேவி இதை அசோக வனத்தில் மாருதியிடம் வெளியிடுகிறாள்.

வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்

சிந்தை யாலும்தொ டேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.

அரசர்கள் பெரும்பாலும் பல மனைவியரோடு வாழ்ந்தனர். தசரதரும் பல மாதரை மணந்திருந்தார். இராமரும் பலரை மணக்கக் கூடும். என்றாலும் அவர் தானே வலிய இந்த விரதத்தை எடுத்துக் கொண்டார்.

இந்த விரதத்திலிருந்து கடைசிவரை இராமர் நழுவவே இல்லை. பஞ்சவடி ஆச்ரமத்தில் சூர்ப்பநகையின் முயற்சி வீணாயிற்றல்லவா?

பின்பு ஒருகால் சீதை வனத்திற்கு அனுப்பப்பட்டாள். அப்பொழுது இராமர் மறுமணம் செய்து கொள்ளவில்லை.

அசுவமேத காலத்திலும் சீதையின் பிம்பங் கொண்டே யாகத்தை நடத்துகிறார்.

இந்த ஏகபத்தினி விரதமே இராமருடைய குணங்களில் மிகச் சிறப்பானது.

ஜன கணிதத்தைப் பார்ப்போம். ஆண் பெண் எண்ணிக்கை எப்பொழுதும் ஏறக்குறைய சமமாகவே இருக்கிறது.

ஆகையால் மனிதன் இரண்டு மூன்று மனைவியரை மணக்கக் கூடாது. மணந்தால் பல ஆண்கள் மனைவியின்றி வருந்த நேரும்.

பெண்களும் இரண்டு மூன்று புருடரை மணக்கக் கூடாது. மணந்தால் பல பெண்கள் கணவரின்றிக் காலங் கழிக்க நேரும்.

ஒருவன் ஒருத்தியோடு வாழவே இயற்கைச் சட்டம் இடம் கொடுக்கிறது.

ஏக பத்தினி விரதம் வாழ்க!

---

முடிவுரை.

இப்படி இராமரிடம் சிறப்பாக—

1. வீரம்.
2. பரிசுத்தம்.
3. தியாகம்.
4. தந்தை சொல் காத்தல்.
5. சர்வ சகோதரத்துவம்.
6. பகைவரிடத்தும் அன்பு.
7. தன் குற்றம் உணர்தல்.
8. ஏக பத்தினி விரதம்.

என்ற உயர்ந்த குணங்களைக் காண்கிறோம். இக்குணங்கள் மனிதர் பின்பற்றக் கூடியவையே. சிலரிடம் இவை விளங்கவும் காண்கிறோம். நாமும் இக்குணங்களைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும்.

இப்படி முயற்சிக்க ஆசை உண்டாக்கி விடுமானல் இந்நூல் பயன் பெற்றதாகும். சீதா பிராட்டி

முதலிய ஏனையோருடைய குணங்களைப் பற்றிய நூல்களுட இம்முறையிலேயே தொடர்ந்து வெளிவரும்.

தருமம் பெருகுக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ ஷண்முகா பிரிண்டிங் ஒர்க்ஸ், திருப்பாதிரிப்புலியூர்.